1994 மே 4]

இந்தச் சாலையை மேம்படுத்துவதற்கு, முன்னதாகவே பாலம் கட்டப்பட வேண்டும் என்பது மிக முக்கியமான பிரச்சினை. இது குறித்தும், முதலிலே இந்தப் பாலத்தைக் கட்டுவதற்கும், அதைப் போல ஃபேஸ் ஓர்க் 28 கிலோமீட்டரையும் ஒரே நேரத்தில் எடுத்துக் கொள்ளாவிட்டாலும்கூட, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்ததைப் போல படிப்படியாக ஒவ்வொரு ஆண்டிற்கு 5 கிலோ மீட்டர் என்ற அளவிலே எடுத்தால் கூட, ஒரு நான்கு ஆண்டுகளிலே அந்தச் சாலையை போட்டுவிட முடியும் என்ற அடிப்படையிலே தான், எதிர்காலத்திலே ஃபேஸ் ஓர்க்காகவும், இந்தப் பெரிய பாலத்தைக் கட்டுவதற்கும் உரிய திட்டத்தை அரசு மிக விரைவிலே பரிசீலிக்கும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 509, திரு. ஆர். சிங்காரம், இருக்கையில் இல்லை. அவருக்குப் பதிலாக திரு. சி. ஞானசேகரன், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

509—

மத்திய மாநில அரசுகள் விவசாயிகளுக்கு அளிக்கும் சலுகைகள் விவரம்.

*20741—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மத்திய, மாநில அரசுகள் அளிக்கின்ற சலுகைகளை விவசாயிகள் நன்கு அறிந்து கொள்ள அரசு தகுந்த ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர் :

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அரசு ஏற்கனவே தகுந்த ஏற்பாடு செய்துள்ளது. வேளாண்மைத் துறையில் உழவர் மேம்பாட்டுக்கு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் அரசு வழங்கும் உதவிகள் கொண்ட தொகுப்பு புத்தக வடிவில் வேளாண்மைத் துறை மானியக் கோரிக்கையின் போது அனைத்து உறுப்பினர்களுக்கும் இச்சட்டப் பேரவையிலே வைக்கப்பட்டது. அதனைப் போல உழவர்களுக்கும் வழங்கப்பட்டு வருகிறது.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் இங்கு ஏற்கெனவே அதற்கான ஏற்பாடு செய்யப்பட்டு இருக்கிறது என்று சொன்னார்கள். இருந்தாலும் கூட, நம்முடைய

[1994 மே 4

தமிழகத்தில் அதிகமான கிராமங்கள் இருக்கின்ற காரணத்தாலே, கிராமப்புறங்களில் வாழ்ந்து கொண்டிருக்கின்ற விவசாயப் பெருங்குடி மக்கள், மத்திய மாநில அரசுகள் கொடுக்கின்ற சலுகைகள் என்ன என்பதை இன்னும் முழுமையாகப் புரிந்து கொள்ள முடியாத நிலையில் இருக்கிறார்கள். நாங்கள் பல மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டங்களிலேகூட இந்த கருத்தை எடுத்துச் சொல்லி, அதற்கு ஒரு தகவல் மையத்தை வைத்தாவது, நாம் இன்னின்ன சலுகைகளை இந்தந்த காலகட்டத்தில் விவசாயிகளுக்கு அளிக்கிறோம் என்பதை ஒரு தனி அதிகாரியைப் போட்டு பி.டி.ஓ. ஆபீசில் கூட வைத்துவிடலாம், இன்னின்ன சலுகைகள் அரசால் இந்தந்த காலக்கட்டத்தில் கொடுக்கப்படுகிறது என்பதை விளம்பரப்படுத்துவதற்காக தனியாக ஒரு அலுவலரை அரசு நியமிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன் :</u> மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு தாலுகா அளவிலும், அங்கேயுள்ள உதவி வேளாண்மை இயக்குநர் அலுவலகத்தில் இதற்கு என்று ஒரு அலுவலர் இருக்கிறார். இன்றைக்கு தேசிய நெடுஞ்சாலை அல்லது மாநில நெடுஞ்சாலை போன்ற அனைத்து சாலைகளிலும் நாம் பயணம் செய்யும் போதெல்லாம். போர்டுகள் எழுதி வைத்து இருக்கிறோம். பாறைகளில் எழுதி வைத்து இருக்கிறோம், வண்டிகளில் எழுதி வைத்து இருக்கிறோம். எனவே இன்றைக்கு எழுத்துமூலமாக அனைத்துப் பகுதிகளிலே விளம்பரங்களைச் செய்கிறோம். அதனைப்போல, இன்றைக்கு வானொலி தொலைக்காட்சி ஆகியவைகளிலும் ஒலி ஒளி பரப்புச் செய்து கொண்டு இருக்கிறோம். வேளாண்மை உதவி அலுவலர்கள் அந்தப் பகுதிகளுக்குச் செல்கின்ற பொழுது அங்குள்ள விவசாயிகளைச் சந்தித்து, இந்த அரசினுடைய திட்டங்களை விளக்கிக் கொண்டு வருகிறார்கள். இன்னும் சொல்ல வேண்டும் என்று சொன்னால், இன்றைக்கு தமிழகத்தில் இருக்கக்கூடிய பத்திரிகைகள் எல்லாம் வேளாண்மைத் துறைக்கு ஒரு பக்கத்திற்கு செய்தியை வெளியிடுகிறார்கள். அதிலே புதிய சாகுபடி பற்றிய கருத்துக்களை எல்லாம் அவர்கள் எழுதி வருகிறார்கள் என்பதனையும் நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :</u> திரு. இராம. இராமநாதன்.

<u>திரு. இராம. இராமநாதன்:</u> மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மிகச் சிறப்பாக சாதனைகளைச் செய்து கொண்டிருக்கிற நம்முடைய ஒப்பற்ற தலைவி இதய

1994 மே 4]

தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய இந்தப் புனித ஆட்சியில் நம்முடைய மாநில அரசின் சார்பாக ஆங்காங்கே இருக்கின்ற ஏழை எளிய விவசாயிகளுக்கு எல்லாம், பல்வேறு சலுகைகளை எல்லாம் இந்த அரசு வாரி, வழங்கி இன்றைக்கு விவசாயிகளுடைய வாழ்வை வளப்படுத்தும் ஒரு காருண்யமிக்க அரசாக விளங்கிக் கொண்டிருக்கிறது. அந்த அளவிலே இன்றைக்கு நாம் பல்வேறு சாதனைகளைச் செய்தாலும், அந்தச் சாதனைப் பட்டியல், அங்கே நாம் என்னென்ன செய்கிறோம் என்பது அந்தப் பாமர மக்கள் மற்றும் விவசாயிகளிடையே முழுவதுமாகத் தெரியாத அளவிலே இருக்கிறது. எனவே, இதனைத் தீர்க்கின்ற விதத்திலே, இவைகளை நன்கு உணர்கின்ற அளவில், திரைப்படப் பிரிவிலே, அதற்கு முன்பாக இந்த ஸ்லைடு போடும் அளவுக்கோ, அதைப்போல பஞ்சாயத்து யூனியன் அலுவலகத்தில் அதனுடைய விளக்கக் குறிப்புகள் அடங்கிய ஒரு அட்டவணையை மாட்டுகின்ற அளவுக்கோ ஒரு செயல் திட்டம் ஏற்படுத்தப்படுமா என்பதை நான் மாண்புமிகு அமைச்சர் வாயிலாக அறிய விரும்புவதோடு, (குறுக்கீடு) முடித்து விடுகிறேன். நம்முடைய உரத்தினுடைய விலையை ஏகப்பட்ட அளவிலே உயர்த்திவிட்டு, சாதனை என்று இங்கே போட்டு இருக்கிறார்கள். ஆனால் மாநில அரசு தான் இன்றைக்கு விவசாயிகளுக்கு சாதனையை பட்டியல் போட்டு காண்பிக்கின்ற அளவில் செய்து கொண்டிருக்கிறது (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை நான் இங்கே தெரிவித்துக் கொண்டு, அதனை விளக்குகின்ற விதமாக திரைப்படப் பிரிவிலே, முன்னதாக ஸ்லைடு போடப்படுமா? அதைப்போல பஞ்சாயத்து யூனியன் அலுவலகத்திலே அட்டவணை வைக்கப்படுமா என்பதை நான் மாண்புமிகு அமைச்சர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-30

மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு ஒன்றியத்திலும் உள்ள வேளாண்மை விரிவாக்க மையங்களில் கரும்பலகை வைக்கப்பட்டு, அதிலே அரசினுடைய திட்டங்கள் எழுதி வைக்கப்படுகின்றன. திரை அரங்குகளில் கூட இன்றைக்கு வேளாண்மை வளர்ச்சியைப் பற்றி, அதுவும் தமிழக முதல்வர் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி ஆட்சிக் காலத்தில் இந்த வேளாண்மைத் துறை எவ்வளவு சிறந்தோங்கி, எவ்வளவு உற்பத்தியைப் பெற்று தந்திருக்கிறது என்பதைப் படங்கள் மூலமாக காட்டுவதற்கு இன்றைக்கு வேளாண்மைத் துறை இதுபோன்ற படத்தொகுப்புகளை தயாரித்துக் கொண்டிருக்கிறது. இது அத்தனைக்கும் மேலாக இன்றைக்கு ஒரு புதிய அணுகுமுறையோடு இந்த வேளாண்மைத் தொழிலில் ஈடுபட்டிருக்கிற

உழவர்கள் படிப்பறிவு அற்றவர்கள், தொலைக்காட்சிப் பெட்டி வாங்கி வைப்பதற்கோ, பார்ப்பதற்கோ, ஏன் வானொலி பெட்டி கூட வாங்கி வைக்க முடியாத நிலையில் இன்றைக்கு இருந்து கொண்டிருக்கிறார்கள். எனவே, அவர்களுக்கெல்லாம் இந்த வேளாண்மைச் செய்திகள் போய்ச் சேர வேண்டும், நவீன தொழில் நுட்பங்கள் அவர்களுக்குக் கிடைத்தாக வேண்டும் என்ற அடிப்படையில் வேளாண்மைத் துறை அலுவலர்களைக் கொண்டு ஒரு இசைக் குழு ஆரம்பிக்கப்பட்டு வெகுவிரைவில் தமிழகத்தில் நடைபெறக்கூடிய, கிராமங்களில் திருவிழா போன்றவைகளில் அந்த இசைக் குழு வேளாண்மைத் துறை வளர்ச்சி, வளர்ச்சிக்கு வேண்டிய ஆலோசனைகள், மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் அரசினுடைய சாதனைகள், இவைகளை எல்லாம் இசைக்குழு மூலமாக, வில்லுப்பாட்டு மற்றும் கலைநிகழ்ச்சி போன்றவை மூலமாக வெளிப்படுத்துவதற்கு இந்த அரசு நடவடிக்கையெடுத்துக்கொண்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :</u> திரு. எஸ். ஆசைமணி.

<u>திரு. எஸ். ஆசைமணி :</u> மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு விவசாயிகள் மத்தியில் மத்திய அரசு சமீபத்தில் கையெழுத்திட்டிருக்கிற டங்கல் திட்டத்தால் விவசாயிகளுக்கு நன்மைகள் விளையும் என்று ஒரு சாராரும், கெடுதல்தான் அதிகம் என்று ஒரு சாராரும் கூறிக் கொண்டிருப்பதால் விவசாயிகள் குழப்பத்திற்கு ஆட்பட்டிருக்கிறார்கள். எனவே, அந்தத் திட்டத்தால் விவசாயிகளுக்கு என்னென்ன நன்மைகள், கெடுதல்கள் என்பதை அரசு அறிவிக்குமா? அதைப்போல மத்திய மாநில அரசுகள் விவசாயிகளுக்கு அளிக்கிற சலுகைகளைப் பட்டியல் போட்டு சட்டமன்ற உறுப்பினர்கள் மூலமாக மக்களுக்கு தெரிவிக்க சட்டமன்ற உறுப்பினர்களுக்கு 'புக்லெட்' போட்டு தருவதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன் :</u> மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வேளாண்மைத் துறை மானியக் கோரிக்கை வந்தபோது நான் விரிவாக சில விளக்கங்களை இந்த அவையில் அளித்திருக்கிறேன். காட் ஒப்பந்தத்தில் இந்திய விவசாயிகளுக்கு ஏற்படக்கூடிய பின்விளைவுகளை, அதனால் ஏற்படக்கூடிய பாதகங்களை பற்றி இந்த அவையில் கேள்வி எழுப்பி இருந்தேன், அந்தக் கேள்விகளைப் பொறுத்த வரையில் மத்திய அரசிடமிருந்து நேரடியாகவோ அல்லது ஆதாரப்பூர்வமாகவோ எந்த பதிலும் கிடைக்கவில்லை. இதைக்கூட 2, 3 தினங்களுக்கு முன்னாள் தினமணி நாளிதழில்

1994 மே 4]

ஒரு கட்டுரையாக எழுதியிருந்தார்கள். தமிழக அரசு இது போன்ற கேள்விகளை மத்திய அரசுக்கு எழுப்பியிருக்கிறது. அதற்குரிய பதில் இன்னும் மத்திய அரசிடமிருந்து வரவில்லை என்பதைக் குறிப்பிட்டு எழுதியிருந்தார்கள். எனவே அரசைப் பொறுத்தவரையில் நாம் இன்றைக்கு உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்து இருக்கிறோம். எனவே, அந்த வழக்கு உச்ச நீதிமன்றத்தில் இருக்கிறது என்பதை மட்டும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. நா. சா. பழனிசாமி.

திரு. நா. சா. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மத்திய மாநில அரசுகள் விவசாயிகளுக்கு நிறைய மானிய விலையில் சலுகைகளை, இடுபொருள்கள் வழங்கி வருவதை சட்டமன்ற, உறுப்பினர்களாகிய நாங்கள் அறிவோம். எங்களுக்கு அதைப்பற்றி விளக்க புத்தகங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் சராசரி கிராமப்புற விவசாயிகளுக்கு எந்தத் திட்டங்கள் அரசால் எந்த நேரத்தில் வழங்கப்படுகின்றன, என்ன சலுகைகள் வழங்கப்படுகின்றன என்பது சரியாக வேளாண்மைத் துறையின் மூலமாக சென்று போய்ச் சேர்வதில்லை. ஒருசில பயனாளிகள் இதிலே இருக்கிறார்கள். அவர்கள் தொடர்ந்து அந்த வேளாண்மைத் துறையோடு தொடர்பு கொண்டு ஒருசிலர் மட்டுமே அந்தச் சலுகைகளை பலனை அடைந்து வருகிறார்கள். எனவே, வேளாண்மைத் துறை இடுபொருள்கள் விநியோகத்தை நிறுத்தி விட்டிருக்கிற சூழ்நிலையில் கிராமப்புற விவசாயிகள் மத்தியில், சராசரி விவசாயிகள் மத்தியில் சென்று அரசின் திட்டங்களை விளக்கி, இந்த அரசு கொடுக்கிற இந்தச் சலுகைகளை எல்லாம் உண்மையான, பாடுபடுகின்ற விவசாயிகள் அதிலே பயனைப் பெற அரசு நடவடிக்கையெடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எப்போதுமே பிறருடைய சிந்தனையில் உதிக்காத கேள்விகள் எல்லாம் புரட்சித் தலைவி அவர்களுடைய சிந்தனையில் வெளிப்பாடாக வெளிவந்து, செயலாக-அவைகளை நடைமுறைப்படுத்துகிற அரசு தான் புரட்சித் தலைவி அவர்களின் அரசு. நாங்கள் சென்ற மாதமே வேளாண்மைத் துறை அலுவலர்களுக்கு அறிவுரை வழங்கி இருக்கிறோம். தொடர்ந்து ஒருவர் அரசு மானியங்களைப் பெற்றுக் கொண்டு வருகிறார் என்றால் அவர் ஏற்கெனவே பெற்றுக்கொண்டிருக்கிற பதிவு ஏட்டுப் பட்டியலைப் பார்த்து அவர்களுக்கு தொடர்ந்து மானிய விலையில் எந்தச் சலுகையும் வழங்கக்கூடாது. புதியவர்களுக்கு

வழங்க வேண்டுமென்ற அறிவுரையை நாங்கள் வழங்கி இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதனைப் போல, மாண்புமிகு உறுப்பினர் திரு. நா. சா. பழனிசாமி அவர்கள், உழவர் உழைப்பாளர் கட்சியிலேயிருந்து புரட்சித் தலைவி அவர்களால், இந்தச் சட்டமன்றத்திற்கு வந்திருக்கிறார்கள். ஆகவே, தங்களுடைய இயக்கத்தைப் பற்றிச் சொல்கிறபோது, இந்த அரசு செய்து இருக்கின்ற சாதனைகளை அவர்கள் பொதுக்கூட்டங்களிலே சொல்லவேண்டும். உழவர் பெருமக்களுக்காக, இந்த அரசினுடைய சாதனைகள், நன்மைகள், கொடுக்கக்கூடிய இலவசப் பொருட்கள் ஆகியவற்றைச் சொன்னால் நலமாக இருக்கும். எனவே மாண்புமிகு உறுப்பினர்கள் ஏறத்தாழ 2 லட்சம் வாக்காளர்களுடைய பிரதிநிதியாக இங்கே வந்திருக்கிறார்கள். நாமும் அந்த மக்களுக்கு நல்லதையே செய்ய வேண்டும். இந்த அரசு செய்ததைச் சொல்லவேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

முற்பகல் 10-35

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. கே. ஆர். இராமசாமி அம்பலம்.

திரு. கே. ஆர். இராமசாமி அம்பலம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நமது அமைச்சர் அவர்கள் கூறும்போது, இதுபோன்ற சலுகைகளை, வில்லுப் பாட்டு போன்ற நிகழ்ச்சிகளின் மூலமாகத் தெரிவிக்கலாம் என்று யோசனை கூறினார்கள். அதற்காக, இதுபோன்ற விளம்பரத்திற்காக இந்த அரசாங்கம் எவ்வளவு ரூபாய் செலவு செய்வதாக இருக்கிறது? ஒரு வானொலிப் பெட்டியையே வாங்கி வைத்துக்கொள்ள முடியாத அளவிற்கு இன்றைக்கு விவசாயிகள் இருக்கிறார்கள் என்று கூறினார்கள். அது போன்றவர்களுக்கு இன்னும் அதிகமாக சலுகைகளைக், கொடுக்கலாமேயொழிய இதைப் போன்ற விளம்பரங்கள் தேவைதானா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நன்கு புரிந்து கொள்ளவேண்டும். ஏதோ வில்லுப் பாட்டு நடத்துகிறோம், எனவே, இதற்காக அரசிடத்திலே நிதி வேண்டும் என்று கேட்கக்கூடிய அரசு அல்ல, ஏற்கனவே விளம்பரங்களை நாம் செய்து கொண்டு வருகிறோம். பத்திரிக்கைகள் வாயிலாக, துண்டுப் பிரசுரங்கள் மூலமாக, எழுத்துக்கள் மூலமாக நாங்கள் செய்து கொண்டு வருகிறோம். எனவே, அவைகளிலே இருக்கக்கூடிய தொகையை சிக்கனப்படுத்தி, இந்த வில்லுப் பாட்டு நடத்தப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

1994 மே 4]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 510, திருமதி கே. மரியம் உல் ஆசியா, மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர்.

510—

தமிழ்நாட்டிலிருந்து மலர்களை அயல்நாடுகளுக்கு ஏற்றுமதி செய்தல்.

*23312—திருமதி கே. மரியம் உல் ஆசியா:

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பூக்கள் தமிழ்நாட்டிலிருந்து வியாபார ரீதியில் வேறு மாநிலங்களுக்கு அனுப்பப்படுகிறதா?

(ஆ) வேறு நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்படுகிறதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர்;

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) பூக்கள் தமிழ்நாட்டிலிருந்து வியாபார ரீதியில் பெங்களூர், நாசிக் மற்றும் பம்பாய் ஆகிய நகரங்களுக்கு தினந்தோறும் அனுப்பப்படுகின்றது.

(ஆ) மற்றும் (இ): தமிழ்நாட்டிலிருந்து நேரடியாக வேறு நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படவில்லை, என்றாலும் பெங்களூர், நாசிக் மற்றும் பம்பாய் போன்ற நகரங்களிலிருந்து மறுபடியும் வேறு சிப்பமிட்டு, அரபு நாடுகள் போன்ற வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. தமிழகத்திலே நம்முடைய மதுராந்தகத்திலேயிருந்து ஒரு நண்பர் வெளிநாடுகளுக்கு நேரடியாக பூக்களை ஏற்றுமதி செய்து வருகிறார், என்ற செய்தி தற்போது கிடைத்துள்ளது.

திருமதி கே. மரியம் உல் ஆசியா: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எந்த வகைப் பூக்கள் வெளி மாநிலங்களுக்கும் மற்றும் அரபு நாடுகளுக்கும் அனுப்பப்படுகின்றன? பூக்களிலிருந்து தமிழ்நாட்டிற்கு வருமானம் எவ்வளவு கிடைக்கின்றது? நேரடியாக வெளிநாடுகளுக்கு அனுப்ப முடியவில்லை என்றாலும், இதன்மூலம் அன்னியச் செலாவாணி